விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 153 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 07 புதன்கிழமை (21.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



ராஜஸ்தான் வெற்றி

## வடக்கு மாகாண பிரதம செயலாளராக
### தனுஜா முருகேசன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் வடக்கு மாகாண பிரதம செயலாளராக தனுஜா முருகேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.



15ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர் யாழ்ப்பாணத்தின் அடையாளம்
### அசைவ உணவகத்தை மூட வலியுறுத்திப் போராட்டம்



16ஆம் பக்கம் பார்க்க

# ஆளும் - எதிர்க்கட்சியினர் சபையில் கடும் வாக்குவாதம்
### சுமார் 20 நிமிடங்கள் கடும் அமளி

(கொழும்பு)

எதிர்க்கட்சி எம்.பிக்கள் கேள்வி எழுப்ப சபாநாயகர் அனுமதி மறுத்ததால் அரச தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையே சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் சுமார் 20 நிமிடங்கள் வரை சபையில் அமளி ஏற்பட்டது.

(16ஆம் பக்கம்

## கைதடியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிப் பகுதியில் முதியோர் இல்லம் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சச்சிதானந்தம் (வயது-79) என்பவரே மரணமடைந்தவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா செட்டிக்குளத்தில்
## யானை தாக்கியதில் ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் கன்னாட்டி கணேச புரம் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்

15ஆம் பக்கம் பார்க்க

### கொழும்புத்துறையில்
## இரத்த வாந்தி எடுத்த இளம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையில் மூச்சு விடக் கஷ்டப்பட்டு இரத்த வாந்தி எடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் கொழும்புத்துறை கந்தர்மடம் வீதியைச் சேர்ந்த தங்கவேல் கலைச்செல்வன் (வயது-42) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (20) அதிகாலை 4.00 மணியளவில் மூச்சு விடக் கஷ்டப்பட்ட நிலையில் இரத்த வாந்தி எடுத்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## முறையான அனுமதி பெறாமலே நல்லூரில் அசைவ உணவகம் திறப்பு
### இன்று வழக்குத் தாக்கல் செய்யப்படும் யாழ்.மாநகர சபை ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் புனித பூமிக்குள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மாட்டிறைச்சி அசைவ உணவகமானது யாழ்.மாநகர சபையின் எந்தவிதமான முறையான அனுமதிகளையும் பெறாமலே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நல்லூர்க் கந்தனின் புனித பூமிக்குள் அசைவ உணவகத்தினை அதிலும் குறிப்பாக மாடுகளை, பசுக்களை சைவர்கள் கடவுளுக்கு நிகராக

15ஆம் பக்கம் பார்க்க

### காணி தொடர்பான வர்த்தமானி
## தமிழ் மக்கள் மீதான இரகசிய இனவழிப்பாகும்
### சபையில் சிறீதரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்திலுள்ள காணிகள் குறித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலானது தமிழ் மக்கள் மீது மீண்டும் நீங்கள் நிகழ்த்தும் ஒரு இரகசியமான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு ரீதியான யுத்தம் என்றுதான் நான்

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாணம்
## சர்வதேச புத்தகக் கண்காட்சி
### இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகக் கண்காட்சி இன்று

15ஆம் பக்கம் பார்க்க

### உடலில் கிருமித் தொற்று
## இளம் குடும்பஸ்தரான தவில் வித்துவான் மரணம்

(யாழ்ப்பாணம்)

உடலில் ஏற்பட்ட கிருமித் தொற்றால் உடற்கூறுகள் செயலிழந்ததால் இளம் குடும்பஸ்தரான தவில் வித்துவான் மரணமடைந்துள்ளார்.

ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த நாகையா நிரோஜன் (வயது-38) என்பவரே மரணமடைந்தவராவ்ர்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த 17ஆம்

15ஆம் பக்கம் பார்க்க

# சடலத்தை அடையாளம் காண உதவுங்கள்

## வவுனியா பொலிஸார் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி இரவு வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 60 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.

குறித்த பெண்ணின் சடலம் வவுனியா பொது வைத்திய சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் இதுவரை பொலிஸாரால் அடையாளம் காணப்படவில்லை.

எனவே அவரது உறவினர்கள் யாரேனும் இருந்தால் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம-4,7,250)

# கண்ணீர் அஞ்சலி



கிளி/பளை மத்திய கல்லூரியின் ஆசிரியர்
**திரு.சி.கவிதாஸன்** அவர்களின்
பாசமிகு மாமனார்

## அமரர் கந்தப்பர் அம்பலவாணர்

அவர்கள் 18.05.2025 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 17.03.1933
உதிர்வு 18.05.2025

(4343)

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**கிளி/ பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)**

# யாழில் 769 வழித்தட சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளர்கள்

## இன்று பணிப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணத்தில் 769 வழித்தட சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் இன்று புதன் கிழமை முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். மயிலிட்டி பகுதியில் இருந்து தமது சேவைகளை ஆரம்பிக்க அனுமதி கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்ப்பாண நகர் பகுதியில் இருந்து புறப்படும் 764 வ்ழித்தட பேருந்துகள் கடந்த காலங்களில், வசாவிளான் சந்தியில் இருந்து, பருத்தித்துறை - பொன்னாலை வீதி வரையிலான பலாலி வீதி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்டமையால், வசாவிளான் சந்தியுடன் தமது சேவைகளை மட்டுப்படுத்தி இருந்தன. அதனால் மயிலிட்டிப் பகுதியில் வசிக்கும் மக்களின் நலன்கருதி, யாழ்ப்பாண நகரில் இருந்து புறப்படும் 769 வழித்தட பேருந்துகள் மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட்டது. தற்போது உயர்பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்லும் பலாலி வீதி திறக்கப்பட்டுள்ளமையால், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 764 வழித்தட பேருந்துகள் யாழ்ப்பாண நகரில் இருந்து புறப்பட்டு பலாலி வீதியூடாக பருத்தித்துறை - பொன்னாலை வீதியை அடைந்து அதனூடாக காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள பேருந்து நிலையம் வரையில் சேவையில் ஈடுபடுகிறது.

அதேபோன்று காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அருகில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடைகிறது.

இந்நிலையில் 769 வழித்தட அனுமதியில் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் தாம் இதுவரை காலமும் மயிலிட்டியில் இருந்து சேவையை ஆரம்பித்தது போன்று ஆரம்பிக்கவும், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு காங்கேசன் துறை வீதி வழியாக மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என கோரியே போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை 764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் பேருந்து சேவைகளை இன்று புதன் கிழமையிலிருந்து காங்கேசன்துறை புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பிக்குமாறும் அதை மீறிச் செயற்படும் பேருந்துகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

# அசைவ உணவகத்தை மூடுக

## மாநகர சபை ஆணையாளரிடம் இன்று மகஜர் கையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் புதிதாக திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூடும்படி அல்லது தூயசைவ உணவகமாக மாற்றும்படியான கோரிக்கை மகஜர் இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ளது.

நல்லூர் சைவ மக்களின் ஏற்பாட்டில் பலரது கையெழுத்துக்களுடன் இம்மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு மகஜரைக் கை யளிப்பதற்காக அனைத்து சைவமக்களையும் நல்லூர் ஆலய முன்றலிற்கு வருகை தருமாறு அழைப்பு விடப்பட் டுள்ளது. (ம-4,7)

# இறையோடு இணைந்த

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் திருமதி மகேஸ்வரி சின்னத்துரை



தாயின் மடியில் : 1937.08.05 இறைவன் அடியில் : 2025.04.21

எம் வாழ்வின் ஒளி விளக்காய்
விடி வெள்ளியாய் வழிகாட்டி நின்ற – எம் தாயே
எந்தையுடன் கூடி – எமை நல்வழிப்படுத்தி – எமக்கு
ஏற்றமிகு வாழ்வு தந்தீரே – உமை
நினைக்காத கணமில்லை
நீங்களின்றி நாமில்லை
நீர் வேண்டும் – உம்முடன் வாழ்ந்த – அந்த
பொக்கிஷமான நாட்கள் மீண்டும் வாராதோ?...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கடந்த 21.04.2025 திங்கட்கிழமையன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3ம் கட்டை,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்

(1154)

# இந்தியா ஏதிலிகளுக்கான சத்திரம் அல்ல!

## அடைக்கலம் கோரிய இலங்கையருக்கு இந்திய உயர் நீதிமன்றின் பதில்

**(டில்லி) .................................. இந்தியாவில் அடைக்கலம் கோரிய இலங்கையர் ஒருவரின் மனுவை நிராகரித்த இந்திய உயர்நீதிமன்றம், உலகம் முழுவதிலுமிருந்து வரும் ஏதிலிகள் தங்குவதற்கான சத்திரம் இந்தியா அல்ல என, வாய்மொழியாகக் குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.**

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் 2015 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட குறித்த நபருக்கு எதிராக, 2018 ஆம் ஆண்டில் சென்னை மேல் நீதிமன்றம் 7 வருடச் சிறைத் தண்டனையை விதித்தது.

குறித்த, தண்டனைக் காலம் நிறைவடைந்ததும், உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேறுமாறு அவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததுடன், அதனைச் சவாலுக்கு உட்படுத்திக் குறித்த இலங்கையர் இந்திய உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, குறித்த நபர் சட்டபூர்வமாக இந்தியா வந்தவர் என்றும், அவரது சொந்த நாட்டில் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளார்.

அதன்போது, உலகம் முழுவதிலுமிருந்து வரும் ஏதிலிகளை இந்தியா வரவேற்க வேண்டுமா என்றும், ஏற்கனவே 140 கோடி பேருடன் போராடி வருகின்ற இந்தியா, வெளிநாட்டினரை மகிழ்விக்கக்கூடிய ஒரு சத்திரம் அல்ல எனவும், இந்திய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயத்தின் தலைமை நீதியரசர் தீபங்கர் தத்தா குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, தமது சேவை பெறுநரின் உயிருக்கு இலங்கையில் அச்சுறுத்தல் இருப்பதாக மனுதாரரின் சட்டத்தரணி தொடர்ந்து வலியுறுத்திய போதிலும், நீதிமன்றம் அவரை வேறு நாட்டிற்குச் செல்லுமாறு கோரியதுடன்.

அவரது மனுவையும் நிராகரித்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)









யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த 2 ஆம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு தினம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டது. யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி செம்மணிச் சந்தியிலுள்ள சங்கிலி மன்னன் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் 2 ஆம் சங்கிலிய மன்னனின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. சிவசேனையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், மதத் தலைவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்-சிவசாந்தன்)

### கொடிகாமம்-மந்துவில் பகுதியில்

# சட்டவிரோத மணலுடன் சென்ற டிப்பர் மீது துப்பாக்கிச் சூடு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் பகுதியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளை சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வானத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, டிப்பர் வாகனம் ஒன்று பளைப் பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிக்கொண்டு கொடிகாமம் நோக்கி வந்துள்ளது. இதன் போது எழுதுமட்டுவாள் பகுதியில் கடமையில் நின்றிருந்த பொலிஸார் வாகனத்தை மறித்த போது பொலிஸாரின் சைகையை மீறி வாகனம் பயணித்துள்ளது. அதன் பின்னர் மேலதிக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு மிருசுவில் பகுதியில் டிப்பர் வாகனத்தை மறித்த போதிலும் வாகனத்தை நிறுத்தாமல் சென்ற நிலையில் பின் தொடர்ந்த பொலிஸார் மந்துவில் பகுதியில் வைத்து வாகனச் சக்கரங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

இருப்பினும் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் தப்பித்துள்ள நிலையில் பொலிஸார் டிப்பர் வாகனத்தைக் கைப்பற்றி மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-8-30)

# ஆளுநரை சந்தித்த கடற்படைத் தளபதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வடக்கு கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் எஸ்.ஜே.குமாரவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்தச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்திலுள்ள கடல் கடந்த தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பிலும், வடக்குக்கான போதைப் பொருள் கடத்தல்களைத் தடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (நி-8)

# விளையாட்டுச் செய்திகள்

# 'ஜெயந்தி குயின்ஸ்' வலைப்பந்தாட்ட போட்டி யாழ்.பல்கலைக்கழக அணி சம்பியன்

வடமாகாண கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட "ஜெயந்தி குயின்ஸ்" ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ் பல்கலைக் கழக அணியினர் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து வவுனியா யங்ஸ்ரார் அணி மோதியது.




நான்கு கால் பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதனால் இரு அணிகளுக்குமான புள்ளிகள் சம அளவில் அதிகரித்துக் கொண்டே சென்றன.

மூன்றாவது கால் பகுதி ஆட்டம் நிறைவு பெற்றிருக்கையில் 21:20 என்ற ஒரு புள்ளி வித்தியாசத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியினர் முன்னிலை வகித்தனர்.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் நான்காவது கால் பகுதி ஆட்ட நேர முடிவில் யாழ் பல்கலைக்கழக அணியினர் 32:27 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (நி-3-8-90)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 230 | 220 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 220 | 200 | 300 |
| தக்காளி | 900 | 800 | 1000 | 750 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 400 | 550 | 550 | 380 | 600 |
| கரட் | 800 | 950 | 1000 | 800 | 1000 |
| பூசணி | 160 | 200 | 170 | 160 | 200 |
| புடோல் | 200 | 280 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 800 | 600 | 800 | 700 | 800 |
| வெண்டக்காய் | 300 | 150 | 200 | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | -- | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 250 | 300 |
| லீக்ஸ் | 350 | 330 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 500 | 400 | 800 |
| கறிமிளகாய் | 800 | 700 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 | 600-1000 | 1000 |
| போஞ்சி | 400 | 600 | 800 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 300 | -- | 320 |
| கீரை – 1 பிடி | 140 | 120-180 | 200 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 400 | 250 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 120-220 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 600 | 500 | -- | 600 |
| வெங்காயப்பூ | 800 | 800 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |

# ரி-20 கிரிக்கெட் தொடரில் சுப்மன் கில் புதிய சாதனை

ஐ.பி.எல். தொடரின் 60 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்றது. இதில் டெல்லி கேப்பிடல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் விளையாடின.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி கேப்பிட்டல்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 199 ஓட்டங்கள் குவித்தது. அதிரடியாக ஆடிய கே.எல். ராகுல் சதமடித்து 112 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணி 19 ஓவர்களில் 205 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. சாய் சுதர்சன் 108 ஓட்டங்களும், சுப்மன் கில் 93 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் 9 ஆவது வெற்றியைப் பதிவு செய்த குஜராத் அணி முதல் அணியாக பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியது.



இந்த போட்டியில் 93 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் ரி-20 கிரிக்கெட்டில் அதிவேகமாக 5,000 ஓட்டங்களை கடந்த 2 ஆவது இந்தியர் என்ற சாதனையை சுப்மன்கில் படைத்து உள்ளார்.

143 இன்னிங்ஸ்களில் 5,000 ஓட்டங்களை கடந்து இந்த பட்டியலில் கே.எல்.ராகுல் முதல் இடத்தில் உள்ளார். சுப்மன்கில் 154 இன்னிங்ஸ்களில் 5,000 ஓட்டங்களை கடந்துள்ளார். (நி-3)

## இன்றைய ஆட்டங்கள்




நேரம்: இரவு 7.30

இடம்-வான்கேடே விளையாட்டரங்கம்

## எடியூ எக்ஸ்போ கல்விக் கண்காட்சியில் பங்குகொள்ளும் SLTC பல்கலைக்கழகம்

SLTC A Research University

எடியூ எக்ஸ்போ ஏற்பாட்டில் எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் நடைபெறும் கல்விக் கண்காட்சியில் SLTC பல்கலைக்கழகம் யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பங்காற்றும் நோக்கில் பங்கு பற்றுகின்றது.

இக் கல்விக் கண்காட்சியில் பொறியியல், விஞ்ஞானம், வணிகம், தொழில்நுட்பம், கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவை தொடர்பில் மாணவர்கள் தங்கள் எதிர்காலக் கனவை நனவாக்கும் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதாக SLTC பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

# சமாதானத்திற்காகவே யுத்தம் செய்தாராம்

## கூறுகிறார் மகிந்த

(கொழும்பு)

தான் சமாதானத்திற் காகவே யுத்தம் செய்ததாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுக் காலை படைவீரர் நினைவுச் சின்னத்திற்கு அருகில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் படைவீரர் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர்இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று நாங்கள் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்தோம். சமாதானத்திற்காகவே யுத்தம் செய்தோம். யாரையும் பிடிப்பதற்காக அல்ல. நாட்டைப் பாதுகாப்பதற்காகவே யுத்தம் செய்தோம்.

எதிர்காலத்தில் இவை மீண் டும் நடைபெறுமா? இல் லையா? என்பதைச் சொல்ல முடியாது.

அது வரும் அரசாங்கங் களைப் பொறுத்தே தீர்மானிக் கப்படும். யுத்தம் என்பது ஒரு துயரச் சம்பவம். ஆனால், எங்கள் இராணுவம் வெற்றி பெற்றது. யுத்தத்தில் ஒரு தரப்பு வெற்றி பெற வேண்டும் தானே. தேசிய பாதுகாப்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை என அவர் தெரிவித்தார். (நி-8)

## திருவள்ளுவர் தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை நடத்தும் திருவள்ளுவர் தினம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுவில் ச.சாம்பசிவம் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் தலைவர் ச. சாம்பசிவம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் ப. ஜெயகரன் மற்றும் கௌரவ விருந்தினராக உடுவில் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் த.றஜிந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் என ஏற் பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

## 75 வது பிறந்த தினமும் 5 ஆம் மாத நினைவலைகளும்

தோற்றம் 21 . 05 . 1951

மறைவு 09 . 01 . 2025



அமரர். பொன்னுத்துரை சிவபாக்கியம்

அன்புத் தாயே!!
ஓராண்டு ஆனது அம்மா!!!
அம்மா என்று நாம் அழைக்க
நீங்களில்லாத துயரம், பாசமாய்
எங்களை வளர்த்த பாசத்தின்
பிறப்பிடமே,பார்க்குமிடமெல்லாம்
எங்கள் பார்வையுள்
தெரிகின்றீர்கள்

காலங்கள் கடந்து சென்றாலும்
ஒவ்வொரு நொடிகளிலும்
இதயத்தின்
துடிப்பைப் போல் அருகில்
நீங்கள் வாழ்வதை நாம்
உணருகின்றோம். இக் கணமும்
உங்கள் நினைவால்
துயருகின்றோம்.

(1145)

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்–1954.07.29

மறைவு–2025.04.22

எமது பாடசாலை ஆசிரியர் திரு. ஆறுமுகசாமி சர்வேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்.

அமரர். சுப்பிரமணியம் ஆறுமுகசாமி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா 31 ஆம் நாளில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(1149)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

## இராசிபலன்

21.05.2025
வைகாசி 07, புதன்கிழமை
நவமி முன்னிரவு 11.03 மணிவரை

சதயம் பிற்பகல் 2.59 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சந்திராஷ்டமம்- ஆயிலியம், மகம்

வளவன்

**மேஷம்**
நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்**
அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்**
எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**கடகம்**
ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி**
கூட்டு முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிரிகள் உதிரியாகும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**
வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எதிர்பார் ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு**
மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், முன்கோபமும், அலைச்சலும் ஏற்படலாம், அதிகாரிகளின் ஆதரவும் பெருகும் நாள்.

**கும்பம்**
விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளை நிறைவேற்றுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**மீனம்**
தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், எதிர்பாராத தனவரவும் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

அகந்தை முன்னால் செல்லும் அவமானம் பின்னே வரும்.

# கடும் மழை காரணமாக நிலக்கடலை செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை

(முல்லைத்தீவு)

**நாட்டில் தற்போது பெய்து வரும் கடும்மழை காரணமாக நிலக்கடலை செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக நிலக்கடலை செய்கை விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் சுமார் 400 ஏக்கர் வரையில் விவசாயிகள் நிலக்கடலை செய்கையினை மேற்கொண்டுள்ளனர்.



இந்த நிலையில், நிலக்கடலை அறுவடை செய்து காய வைத்து பிரித்து எடுப்பதற்காக காத்திருந்த வேளை தற்போது பெய்த கடும் மழையினால் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாக நிலக்கடலை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த இரண்டாம் மாதம் அளவில் நிலக்கடலை விதைப்பினை மேற்கொண்ட விவசாயிகள் அப்போதைய காலத்திலும் மழையினால் அழிவினை சந்தித்துள்ளதுடன் தற்போது நிலக்கடலையினை மரத்தில் இருந்து பிரித்து எடுக்கும் நடவடிக்கைக்காக வெய்யிலில் காயவைத்த வேளை மழையினால் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

சுமார் 50 தொடக்கம் 75 ஏக்கர் வரையான நிலக்கடலை அறுவடை செய்யப்பட்டு வெய்யிலில் காயவிடப்பட்ட நிலையில் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரபுரம் கமக்கார அமைப்பினர் கவலை தெரிவித்துள்ளனர். (8)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாச நாதசுவாமி ஆலய (நல்லூர் சிவன் கோவில்) தேவி மஹோற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாவுள்ளது.

இம் மகோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இரதோற்சவமும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெற்று 11 ஆம் திகதி புதன் கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

## அகில இலங்கை இளங்கோ கழகத்தின்

# சிலப்பதிகார விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒலி-2025 சிலப்பதிகார விழா எதிர்வரும் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் 3 நாள் நிகழ்வுகளாக கரவெட்டி, துன்னாலை, அல்லையம்பதி வடிவேல் மண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

முதலாம் நாள் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் "எமது தேசத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் தேவையானது உயர்ந்த அறமே, தெளிந்த அறிவே" எனும் தொனிப்பொருளில் யாழ்.பல்லைக்கழக சட்டத்துறை தலைவர் திருமதி.கோசலை மதன் நடுவராக பங்குபற்றும் விவாத அரங்கு மற்றும் "இளங்கோவடிகள் தன் காப்பியத்துனுள் பெரிதும் வலியுறுத்தும் பாவிகச் செய்தி" எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் நடுவராகப் பங்குபற்றும் பட்டிமண்டபம் என்பன இடம்பெறவுள்ளன.

குறித்த நிகழ்வில் புலமை ஒலி உயர் விருதினை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும், கல்விப் பணிக்கான உயர் விருதினை வடகிழக்கு மாகாண ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சின்னையா சிவராசா அவர்களும் இலக்கியப் பணிக்கான உயர் விருதினை மூத்த சிறுகதை ஆசிரியர் செ.கந்தசாமி அவர்களும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நிகழ்வு 24 ஆம் திகதி சனிக்கிழமை கலைஞர் கந்தையா வடிவேலு அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் "பழசை மறந்த பழசுகள்" எனும் தொனிப்பொருளில் சிலம்பிசை கோ.கோகிலரதன் நடுவராகப் பங்குபற்றும் கவியரங்கு, "பாண்டியன் பாவை" எனும் தொனிப்பொருளில் வாமதேவ சிவசதீபன் ஆற்றும் கதாப்பிரசங்கம் மற்றும் "நீதியை நிலைநாட்டி தியாகம் செய்தவர் என்ற பெருமைக்குரியவர்" எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜின் இலக்கிய ஆணைக்குழு என்பன இடம்பெறவுள்ளன.

குறித்த நிகழ்வில் கலைப்பணிக்கான உயர் விருதினை இசைவாணர் கண்ணன் முத்துக்குமாரு கோபாலகிருஸ்ணன் அவர்களும் சமயப் பணிக்கான உயர் விருதினை கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி அவர்களும் சொல்வண்மைக்கான உயர் விருதினை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்களும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

மூன்றாம் நாள் நிகழ்வு 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருமதி வசந்தகுமாரி கதிரவேற்பிள்ளை அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சி.கிருஷ்ணாகரனின் நெறியாள்கையில் இளங்கோ கழக இளைஞர் அணியினர் வழங்கும் "தமிழ் அமுதம்" இசை விருந்து, "குற்றக் கூண்டில் சிலப்பதிகார தலைவியர்" எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜின் வழக்காடு மண்டபம் என்பன இடம்பெறவுள்ளன.

குறித்த நிகழ்வில் சமூகப் பணிக்கான உயர் விருதினை வடிவேலு சந்திரசேகரம் அவர்களும் சிலம்பிசை விருதினை த.குருபரன், க.வாணிமுகுந்தன் ஆகியோரும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (க-நி-8)

# கனிய மணல் அகழ்வுக்கு அனுமதிக்க மாட்டோம்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம்



(மன்னார்)

மன்னார் பேசாலை 50 வீட்டுத்திட்ட கடற்கரையோர பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியில், கடந்த திங்கட்கிழமை மதியம் கனிய மணல் அகழ்வுக்கான நில அளவை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலையீட்டினால் குறித்த நடவடிக்கை கைவிடப்பட்ட நிலையில், நில அளவைக்கு என கொழும்பு தலைமையகத்தில் இருந்து வருகை தந்தவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளரினால் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியும், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அனுமதியும் பெற்றுக் கொண்டு நில அளவை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும், அதற்கு மாறாக அவர்கள் மன்னாரில் இருக்கும் நில அளவை திணைக்களத்திற்கு மாறாக கொழும்பு தலைமையகத்தில் உள்ள நில அளவை திணைக்களத்தில் இருந்து ரோன் மூலம் இப் பிரதேசத்தை அளப்பதற்கு குறித்த பகுதிக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன்,மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மீனவ அமைப்பு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் குறித்த பகுதிக்கு சென்றிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், குறித்த விடயம் தொடர்பாக இம்மாத இறுதியில் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும், அதன் பின்னர் இவ்விடயம் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் குறித்த நடவடிக்கையை தொடர்வதா? இல்லையா என்பது குறித்து முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், நிலையில் கொழும்பில் இருந்து வருகை தந்த நில அளவை திணைக்களத்தினர் குறித்த நடவடிக்கையை கை விட்டுச் சென்றுள்ளனர். (8-285)

# பொறுப்புக்கூறலுக்கான உறுதிப்பாட்டை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து



(கொழும்பு)

**இலங்கை உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க பொறுப்புக்கூறலுக்கான தனது உறுதிப்பாட்டை புதிய அரசாங்கம் நிரூபிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவின் துணை பணிப்பாளர் மீனாட்சி கங்குலி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான போர் இரு தரப்பினராலும் பரவலாக அத்துமீறல்களால் குறிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில், முந்தைய நிர்வாகங்களிலிருந்து விலகி, அடக்குமுறை மற்றும் பாகுபாட்டின் மரபை நிவர்த்தி செய்வார் என்று நம்பி, பல தமிழர்கள் அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி பதவிக்காக வாக்களித்தனர்.

காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட முந்தைய அரசாங்கங்களின் தோல்வியுற்ற முயற்சிகளை திஸாநாயக்க அரசாங்கம் ஆதரித்துள்ளது, ஆனால் அவை எந்த முன்னேற்றத்தையும் அடையவில்லை.

இந்த நிறுவனங்கள் பல பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன, அவர்கள் அவற்றை தோல்வியுற்ற வாக்குறுதிகளின் ஒரு பகுதியாகவே பார்க்கிறார்கள்.

இதற்கிடையில், தமிழர்களை குறிவைத்து நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது.

(GSP+ திட்டங்களின் கீழ் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கு வரி இல்லாத அணுகலைப் பேணுவதற்கான நிபந்தனையாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இந்த கொடூரமான சட்டத்தை இரத்து செய்வதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

பொறுப்புக்கூறல் தொடர்பான முன்னேற்றத்தை ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் அலுவலகம் அறிக்கையிட்டு கண்காணிக்க வேண்டும் என்றும், எதிர்கால வழக்குகளில் பயன்படுத்த சர்வதேச குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை நிறுவ வேண்டும் என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டது.

இலங்கையில் முன்னேற்றம் இல்லாததால், சர்வதேச குற்றங்களைச் செய்பவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கு புதுப்பித்தல் மிக முக்கியம். சபையின் தலையீட்டை "பிளவுபடுத்தும் மற்றும் ஊடுருவும்" என்று திஸாநாயக்க அரசாங்கம் எதிர்த்துள்ளது.

எனவே, மதிப்பிழந்த உள்நாட்டு முயற்சிகள் செயற்படுவதாக பாசாங்கு செய்வதற்குப் பதிலாக, பொறுப்புக்கூறல் திட்டத்தை புதுப்பிப்பதற்கான தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் பொறுப்புக்கூறலுக்கான தனது உறுதிப்பாட்டை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும்.

மேலும் இறுதியில் நீதியை வழங்குவதற்காக பாடுபட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-8)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர் II பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் அத்துடன் ஓர் நாய்க்கான உரிமம் கட்டணமான 100 ரூபாய் அறவிடப்படும் என யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (நி)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 21.05.2025 | 9.00-1.00 | அத்தியடி பிள்ளையார் கோவிலடி அத்தியடி |
| | 11.00 - 1 .00 | ஸ்ரான்லி வீதி பெற்றோலியக்கூட்டுத்தாபனம் முன்பாக |
| | 2.30- 4 .00 | கோவில் வீதி நாவலர் வீதி சந்தி |
| 22.05.2025 | 9.00-1.00 | இராசாவின் தோட்ட வீதி ஸ்ரான்லி வீதி சந்தி |
| | 11.00 - 1 .00 | கோவில் வீதி றக்கா வீதி சந்தி |
| | 2.30- 4 .00 | மருதடி லேன் வைரவர் கோவிலடி |
| 23.05.2025 | 9.00-1.00 | நல்லூர் தெற்கு சனசமூக கற்பக பிள்ளையார் கோவிலடி |
| | 11.00 - 1 .00 | றக்கா வீதி இளம்சிங்கம் சனசமூக நிலையம் |
| | 2.30- 4 .00 | கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதி |
| 26.05.2025 | 9.00-1.00 | மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம் |
| | 11.00 - 1 .00 | ஆருள்மாதா கோவிலடி ராசாவின் தோட்டம் |
| | 2.30- 4 .00 | மாட்டீன் வீதி சப்பல் வீதி சந்தி |
| 27.05.2025 | 9.00-1.00 | 2 ஆம் குறுக்குதெரு வேம்படி வீதி யாழ்ப்பாணம் |
| | 11.00 - 1 .00 | OLR. தேவலாயம் 4 ஆம் குறுக்குதெரு |
| | 2.30- 4 .00 | யாழ்.புகையிரத நிலைய வீதி வைரவர் கோவிலடி |
| 28.05.2025 | 9.00-1.00 | கோயில் வீதி ரயில் தண்டவாள சந்தி |
| | 11.00 - 1..00 | ஆஸ்பத்திரி வீதி கோயில் வீதி சந்தி |
| | 2.30- 4 .00 | சோமசுந்தரம் வீதி |
| 29.05.2025 | 9.00-1.00 | பழைய பாங்கா பகுதி |
| | 11.00 - 1 .00 | சுவாஸ் லேன் |
| | 2.30- 4 .00 | கொழும்புத்துறை வீதி விதனையார் வீதி சந்தி |
| 30.05.2025 | 9.00-1.00 | சந்தனமாதா கோவில் பகுதி |
| | 11.00 - 1 .00 | கச்சேரி கிழக்கு ஒழுங்கை |
| | 2.30- 4 .00 | குருசோ வீதி கிறின்பில்ட வாசிகசாலை |
| 02.06.2025 | 9.00-1.00 | மத்தியூஸ் வீதி சென்சாள்ஸ் ஆரம்ப பாடசாலை |
| | 11.00 - 1 .00 | காட்டுக் கந்தோர் ஒழுங்கை |
| | 2.30- 4 .00 | கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச்சந்தி |




## பாரதம்

# விரைவில் காசா இஸ்ரேல் வசமாகும்!

## நெதன்யாகு திட்டவட்டம்



(டெல் அவிவ்)
“புதிய தரைவழி தாக்குதலை தொடங்கிய பின், காசாவை இஸ்ரேல் முழு கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரும்,” என, அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாவை ஆளும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே ஓராண்டுக்கு மேலாக மோதல் நீடித்த நிலையில், உலக நாடுகளின் தலையீட்டால் கடந்த ஜனவரியில் முதற்கட்டப் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஆறு வார காலப் போர் நிறுத்தத்தின் போது, இரு தரப்பிலும் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இரண்டாம் கட்டப் போர் நிறுத்த பேச்சின் போது, இஸ்ரேல் விதித்த நிபந்தனைகளை ஏற்க ஹமாஸ் தரப்பு மறுத்தது.

இதையடுத்து, காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த மூன்று நாட்களில், காசா மீது நடத்தப்பட்ட தாக்குதலில், 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக காசா சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

காசாவில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, கடந்த மூன்று மாதங்களாக குறைந்த அளவு உணவு மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்தது. புதிதாக பொறுப்பேற்ற போப் லியோ உட்பட உலக நாடுகளின் தலைவர்கள், காசா மக்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து எடுத்துரைத்தனர்.

இதையடுத்து, மூன்று மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளை, காசாவிற்குள் முழுமையாக அனுமதிக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், சமூக வலைதள பக்கத்தில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியுள்ளதாவது:

ஹமாஸுடனான சண்டை தீவிரமாக உள்ளது. நாங்கள் முன்னேறி வருகிறோம். புதிய தரைவழி தாக்குதலை துவங்கிய பின், காசாவின் அனைத்து பகுதிகளையும் எமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம். நாங்கள் போரை கைவிட மாட்டோம். வெற்றியை நோக்கி பயணிப்போம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# ஹபீஸ் சயீத்தை ஒப்படைத்தால் மட்டுமே

## அனைத்திற்கும் முடிவு - இந்தியா தூதர்




(டில்லி)
ஆப்ரேஷன் சிந்தூர் முடியவில்லை, இந்தியாவிடம் பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தை பாகிஸ்தான் ஒப்படைத்தால் மட்டுமே அனைத்தும் முடிவுக்கு வரும் என்று இஸ்ரேலுக்கான இந்தியத் தூதர் ஜெ.பி. சிங் தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதல், அதற்கு ஆப்ரேஷன் சிந்தூர் மூலம் பதிலடி, பயங்கரவாத முகாம்கள் அழிப்பு என இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. ஆப்ரேஷன் சிந்தூர் என்பதே இடைநிறுத்தமே, இன்னமும் முடிவுக்கு வரவில்லை என்று இந்தியா அறிவித்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலுக்கான இந்தியத் தூதர், பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தை பாகிஸ்தான் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி உள்ளார். இஸ்ரேலில் பிரபல தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது, மதத்தின் அடிப்படையில் பயங்கரவாதிகள் மக்களை கொல்கின்றனர். அவர்களை கொல்லும் முன்பு, எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டுள்ளனர். அதன் பின்னரே கொன்றுள்ளனர். இதற்கு இந்தியா பதிலடி தந்துள்ளது.

ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை என்பது தற்காலிகமாக தான் இடை நிறுத்தப்பட்டு உள்ளது. அது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. பயங்கரவாதத்திற்காக போராட்டம் தொடரும். அவர்கள் எங்கிருந்தாலும் அழிப்போம்.

நாங்கள் சிந்துநதி நீர் மூலம் தண்ணீரைப் பாய அனுமதித்தாலும், பாகிஸ்தான் பயங்கரவாதத்தை இந்தியாவுக்குள் பாய அனுமதிக்கிறது. தண்ணீரும், இரத்தமும் ஒன்றாக பாய முடியாது என்று இதைத்தான் பிரதமர் மோடி தெளிவுபடுத்தியுள்ளார்.

பயங்கரவாதிகள் தொடர்பு குறித்து நாங்கள் தொழில்நுட்ப ரீதியான உள்ளீடுகளை அளித்துள்ளோம். அமெரிக்கா ஆதாரங்களை பகிர்ந்து கொண்டு இருக்கிறது. ஆனாலும் பயங்கரவாதிகள் சுற்றித் திரிகின்றனர்.

ராணாவை ஒப்படைக்க அமெரிக்காவால் முடியும் போது, பாகிஸ்தானால் ஏன் பயங்கரவாதிகளை (ஹபீஸ் சயீத், சாஜித் மிர், ஜாகிர் ரஹ்மான் லக்வி) ஒப்படைக்க முடியாது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஒருபோதும் ஏற்கவே முடியாது என்று பிரதமர் மோடி ஏற்கனவே தெளிவுப்படுத்தி விட்டார் என அவர் தெரிவித்தார். (நி-8)

# ரஷ்

# போர்

## ஜெலன்ஸ்

**(வோஷிங்டன்)**
**ரஷ்ய ஜனாதிப**
**புடினுடனான இரண**
**தொலைபேசி உ**
**பின்னர், ரஷ்யாவு**
**போர் நிறுத்தம் ம**
**முடிவுக்குக் கொண்டு**
**பேச்சுவார்த்தைக**
**யாக” தொடங்கும்**
**ரிக்க ஜனாதிபதி டெ**
**தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் திங்கட் கிழமை நடந்த தொலைபேசி உரையாடலானது “மிகவும் சிறப்பாக” நடந்ததாக விபரித்த ட்ரம்ப், இரு தரப்பினருக்கும் இடையே அமைதிக்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஆனால், போர் நிறுத்த

செ
எடு
ரஷ்
புதி
சேரு
சுட்
2
இரு
நேர

# இந்தோனேசியா

# 19 தொழிலா

(ஜெகர்த்தா)
தெற்காசிய நாடுகளில் ஒன்றான இந்தோனேசியா அதிக அளவில் கனிம வளங்கள் கொண்டது. ஆசிய நாடுகளிலேயே தங்க உற்பத்தியில் முன்னணி நாடாக இருந்து வருகிறது. கடந்த 2024 ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் இருந்து மட்டும் சுமார் 100 தொன் அளவில் உலக நாடுகளுக்கு தங்கம் ஏற்றுமதி ஆனது.

வடக்கு சுலேவேசியில் உள்ள டோகா திண்டுங் தங்கச்

சுரா
கங்
சும்
தும்
சார்
தங்
கின
வது
தங்
தங்
செய

# ஷ்யா - உக்ரைன்

# ர் நிறுத்தத்திற்கு தயார்!

## ஸ்கி – ட்ரம்ப் – புடின் உரையாடலின் பின் முடிவு

**டன்)**

**ாதிபதி விளாடிமிர் இரண்டு மணிநேர உரையாடலுக்குப் ாவும் உக்ரைனும் ம் மற்றும் போரை ண்டுவருவதற்கான தைகளை "உடனடி கும் என்று அமெ தி டொனால்ட் ட்ரம்ப்**



செயல்முறைக்கு மொஸ்கோ நேரம் எடுக்கும் என்றும் கூறிய ட்ரம்ப், ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்க புதிய தடைகளுடன் ஐரோப்பாவில் சேரத் தயாராக இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

2022 மார்ச் மாதத்திற்கு பிறகு இரு தரப்பினரும் தங்கள் முதல் நேருக்கு நேர் பேச்சுவார்த்தைக்காக கடந்த வாரம் துருக்கியில் சந்தித்த பின்னர், மொஸ்கோவிற்கும் கீவிற்கும் இடையே நேரடிப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு ஆதரவளித்த ட்ரம்ப்க்கு இந்த தொலைபேசி உரையாடலின் போது புடின் நன்றி தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடனும் போர் நிறுத்தம் குறித்து ட்ரம்ப் பேசியுள்ளார்.

ட்ரம்புடனான நேரடி தொலைபேசி உரையாடலுக்குப் பின்னர் "முழுமையான மற்றும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்திற்கான" உக்ரைனின் விருப்பத்தை ஜெலன்ஸ்கி மீண்டும் இதன்போது உறுதிப்படுத்தினார்.

புடினுடனான ட்ரம்ப்பின் உரையாடலுக்கு முன்னதாகப் பேசிய ஜெலன்ஸ்கி, உக்ரைன் பற்றிய எந்தவொரு முடிவும் தனது நாடு இல்லாமல் எடுக்கப்படக் கூடாது என்று கேட்டுக் கொண்டதாகவும், அவை உக்ரைனுக்கு "இறையாண்மை விடயங்கள்" என்றும் தெரிவித்தார். (நி-8)

## ியாவில் தங்க சுரங்கம் இடிந்து லாளர்கள் உயிரிழப்பு

சுரங்கம் மிகப்பெரிய தங்கச் சுரங்கங்களில் ஒன்றாகும்.

மேலும் கிழக்கு ஜாவாவில் உள்ள சும்பெராகுங் தங்கச் சுரங்கம், தும்பாங் தங்கச் சுரங்கம் என அரசு சார்பிலும் தனியார் நிறுவனங்களும் தங்கச் சுரங்கங்களை தோண்டித் தங்கத்தை வெட்டி எடுத்து வருகின்றன. இருப்பினும் நாடு முழுவதும் ஆங்காங்கே சட்டவிரோதமாக தங்கச் சுரங்கங்கள் தோண்டப்பட்டு தங்கம் வெட்டி எடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

உரிய விதிமுறைகளை பின்பற்றாமல் செயற்படும் இந்த சுரங்கங்களால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுவது மட்டுமின்றி அவ்வப்போது அசாம்பாவிதச் சம்பவங்கள் அரங்கேறுகின்றன. இதனால் இவற்றை அகற்ற அரசு சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் மேற்கு பப்புவா மாகாணம் ஏர்பாக் மலைப்பகுதி அருகே சட்டவிரோதமாக தங்கச் சுரங்கம் தோண்டப்பட்டு தங்கம் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த சுரங்கத்தில் உள்நாட்டினர் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்து ஏராளமானவர்கள் தங்கியிருந்து பணிபுரிந்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று வடக்கு பப்புவாவில் கன மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சட்டவிரோத தங்கச் சுரங்கத்துக்குள்ளும் வெள்ளம் புகுந்தது. தொழிலாளர்கள் பலர் தங்கம் வெட்டி எடுத்து கொண்டிருந்த சமயத்தில் அந்தச் சுரங்கம் பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது.

இடிபாடுகளில் சிக்கி 19 பேர் உயிரிழந்தனர். இது குறித்து தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடிய 20இற்கும் மேற்பட்டோரை மீட்டு வெளியே கொண்டு வந்தனர். உயிரிழந்த 6 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது. மீட்புப்பணி தொடர்ந்து நடைபெறுகிறது. (நி-8)



## வரணி பிரதேச வைத்தியசாலைக்கு
# ரஜீவன் எம்.பி விஜயம்



(சாவகச்சேரி)

தென்மராட்சி-வரணி பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

வைத்தியசாலையில் நிலவுகின்ற தேவைப்பாடுகள் தொடர்பாக பிரதேச மக்களால் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் அவர் மேற்படி விஜயத்தை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பொதுமக்களோடு வைத்தியசாலையின் தற்போதைய நிலவரம் மற்றும் தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, sale Executive
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்
தொ.இ: B/15489

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
9இல்சூரி செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - BTech, Canada
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15490

பிறப்பு: 1981-இந்து
நட்சத்திரம்: சுவாதி
8இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L, Painting
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15492

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 6"
தகைமை/தொழில்: Dip in Agriculture, Post master
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15494

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Phone Repair
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15495

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: சதயம்
7இல் செவ்
கி.பா-47
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc, IT Field
எதிர்பார்ப்பு: Degree Holder.வெளிநாடு
தொ.இ: G/15467

பிறப்பு: 1998 - இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா-14 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS (Final Year)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15023

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
1இல் செவ்
உயரம்: 6'
தகைமை/தொழில் - Unani Medical Student (3rd Year, Colombo University)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer. உயர் தொழில்.
தொ.இ: G/15025

பிறப்பு: 1991 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
7இல் செவ்
கி.பா-15
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: London.
எதிர்பார்ப்பு: வெளிநாடு UK மட்டும்.
தொ.இ: G/15030

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா-24
உயரம்: 5'2"
தகைமை/தொழில்-NCT Civil Engineer, DO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம். வெளிநாடு
தொ.இ: G/10704

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 376



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இன்னும் இருக்கிறது!

என்னுடைய நண்பர் ஒருவர். அவருக்கு ஜாதகத்திலே நம்பிக்கை உண்டு. அவரே ஜோசியம் எல்லாம் பார்ப்பார். என்ன சார். இந்தக் காலத்திலே இதையெல்லாம் நம்பிக்கொண்டிருக்கின்றீர்களே என்று கேட்டார்.

உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இந்த உலகத்திலே ஒவ்வொருத்தரும் அவரவர் செய்கின்ற நல்லது கெட்டதுக்கு தகுந்த பலனை அனுபவித்தே தீரணும் என்பார்கள்.

அது மட்டும் இல்லை. ஒருத்தன் இறந்து விட்டால் கூட அவன் செய்த பாவ புண்ணியங்கள் கூடவே போய்க்கொண்டிருக்கும் என்பார்கள். அது எப்படிக் கூடப் போகும்? என்று குதர்க்கமா, கேட்டேன். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார். அது ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது. அதை இப்போது உங்களுக்குச் சொல்கின்றேன்.

ஒரு ஊரிலே ஒருத்தர் இருந்தார். அவர் ஜோசியம் பார்ப்பதிலே ரொம்பக் கெட்டிக்காரர். ஒருத்தருடைய தலைமுடியை மட்டும் அவரிடம் காட்டினால் போதும் அதை மட்டும் பார்த்துவிட்டு அவருடைய ஜாதகத்தையே அலசி விடுவாராம். அப்பேற்பட்ட திறமை!

அந்த ஆள் ஒரு சமயம் கன்னியாகுமரி கடற்கரைக்கு போயிருந்தார். அங்கே கரை ஓரமாக ஒரு மண்டை ஓடு கிடந்திருக்கு! அதை எடுத்துப் பார்த்திருக்கிறார். அந்த மண்டை ஓட்டை வைத்துக் கொண்டே அதன் ஜாதகத்தை அலசியிருக்கார். இந்த மண்டை ஓட்டுக்கு உரிய ஆசாமி வாழ்க்கையிலே ரொம்ப கஷ்டப்பட்டிருக்கிறான். நிறைய கஷ்டத்தை அனுபவிச்சிருக்கான். அது தாங்க முடியாமல் தான் கடலிலே விழுந்து தற்கொலை செய்து கொண் டார். என்பதை அவர் கணித்துவிட்டார். இருந்தாலும் இந்த மண்டை ஓடு இன்னமும் அனுபவிக்க வேண்டியது பாக்கியிருக்கு என்பதை அவர் உணர்ந்தார். அதுசரி ஒருத் தன் உயிரோட இருக்கிறவரைக்கும் தானே நல்லது கெட்டதை அனுபவிக்க முடியும்? இறந்ததற்கு அப்புறமும் பாக்கி இருக்கிறது என்றால் அதை எப்படி அனுபவிக்கிறது? இந்த மண்டை ஓட்டுக்கு இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கு என்பது அவருக்கு புரிஞ்சுதே தவிர அதோட அர்த்தம் என்ன என்பது சரியாக விளங்கவில்லை!

இதை இன்னும் விவரமாக ஆராய்ச்சி செய்வோம் என்று நினைத்து கொண்டு அதை தன்னுடைய வீட்டுக்கே எடுத்துக் கொண்டு போய் விட்டார். அந்த மண்டை ஓட்டை ஒரு பெட்டியிலே வைத்துப் பூட்டினார். தன்னுடைய தனி அறையிலே அதைப் பத்திரமாக வைத்துவிட்டார். தினமும் இரவு ஆனதும் தன்னுடைய மனைவியைப் பார்த்து நீ போய் பூஜை அறையிலே தனியாகப் படுத்துக் கொள் என்று சொல்லிவிட்டு தினமும் இரவு 12 மணிக்கு பெட்டியைத் திறந்து அவர் பார்ப்பார். மண்டை ஓடு அப்படியே இருந்ததே தவிர இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்குங்கறது என்பதற்கு அர்த்தம் அவருக்கு விளங்கவில்லை அந்த மண்டை ஓட்டுக்கு இன்னும் என்ன பாக்கி இருக்கப்போகிறது.

இப்படியே ஒரு பத்துநாட்கள் போய்விட்டன. மனைவிக்குச் சந்தேகம் வந்துவிட்டது! நமது வீட்டுக்காரர் தன்னை தனியாக ஏன் தூங்கச் சொல்கிறார்? என்கின்ற சந்தேகம்.

உடனே பக்கத்து வீட்டு அம்மாவிடம் விடயத்தைச் சொன்னார். அந்த அம்மா உடனே. நீ கவலைப்படாதே. நான் கண்டுபிடித்துச் சொல்றேன்! என்று சொன்னார்.

அன்றைக்கு இரவு ஜன்னல் வ்ழியாக எட்டிப்பார்த்தார். அந்த ஆள் மண்டை ஓட்டை கையிலே வைத்துக் கொண்டு அதைத் திருப்பித் திருப் பிப் பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்து விட்டது.

மறுநாள் காலையிலே அவருடைய மனைவியைப் பார்த்தார். ஏம்மா? உன் கணவருக்கு நீ முதல் மனைவியா? இரண்டாவது மனைவியா?"என்று கேட்டார்.

எனக்குத் தெரிந்தவரைக்கும் நான் ஒருத்திதான் அவருடைய மனைவி என்றார் அவர். அப்படி இல்லை. நீ அவருக்கு இரண்டாவது மனைவி முதல் மனைவியின் மண்டை ஓட்டைத்தான் அவர் தினமும் இரவிலே எடுத்துப் பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்றார் அடுத்த வீட்டு அம்மா!

அப்படியா விடயம் என்று சொல்லிவிட்டு, கணவன் வீட்டிலே இல்லாத நேரமாகப் பார்த்து அந்த மண்டை ஓட்டை எடுத்துக் கொண்டு வந்து ஒரு உரலிலே போட்டு உலக்கையாலே குத்தி நொறுக்க ஆரம்பித்தார்.

வெளியே போயிருந்த அந்த ஆள் அப்பத்தான் உள்ளே நுழைஞ்சார். மண்டை ஓடு உலக்கையிடம் குத்து வாங்கிக்கொண்டிருந்தது. அது அனுபவிக்க வேண்டியது இன்னும் கொஞ்சம் பாக்கியிருக் குங்கறதுக்கு அர்த்தம் எனக்கு இப்பத்தான் புரிந்தது என்றார் அவர்!

இந்தக் கதையிலேயிருந்து நாம் இன்னொரு நீதியையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது: நமது வீட்டைப் பற்றி நமக்குப் புரியாதது எல்லாம் அடுத்த வீட்டுக்காரர்களுக்கு நல்லா புரியும்

# மே 20: உலக தேனீதினம்- தேனீக்களின்றேல் மனிதகுலம் இல்லை



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

தேனீக்களின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கொண்டாட்டமாக வருடாவருடம் உலக தேனீ தினம் ( World Bee day) இவ்வருடத்தில் நேற்றையதினம் (மே 20 ஆம் திகதி) கொண்டாடப்பட்டிருக்கின்றது. தேனீக்கள் உலகில் இல்லையென்றால் ஏறக்குறைய 60 சதவீதமான அயன் மகரந்த சேர்க்கையால் விதைகளை உருவாக்கும். அனைத்துப் பயிர்களும் விளைச்சலின்றியே போய்விடும். அவ்வாறாயின் பயிர் விளைச்சலில் அதன் உணவுற்பத்தியில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என சிந்தித்துப் பாருங்கள். இயற்கை ஈய்ந்த உயிருள்ள சிறந்த மகரந்த சேர்க்கைக்கருவியான தேனீக்கள் எமது வாழ்க்கை தருகின்ற பிராணிகளாகும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

இவ்வருட உலக தேனீ தினத்தின் கருத்துப்பொதியாக "இயற்கை தேனீக்களை ஈர்த்து எமக்கு உணவளிக்கிறது" (Bee inspired by nature to nourish us all). இயற்கையின் சாகசங்களில் இது மிகவும் சிறப்புக்குரியது.

என்ன யோசிக்கிறீர்கள்? இயற்கை எம்மை முதன்மைப்படுத்தி எமக்காக தேனீக்களைப் படைத்து அவற்றை உள்ளுக்கம் பெறச் செய்து எமக்கான உணவை உற்பத்தி செய்ய உந்துதலளித்திருக்கின்றது. அதனையே மனிதன் தற்போது மாற்றியமைத்து தனக்கான உணவைப் பூச்சிகளிலிருந்து பெறத் தயாராகிவிட்டான். இதற்காக பூச்சிகளை தொழில்நுட்பத்திற்குட்படுத்தி அவற்றிலிருந்து புரதம் மற்றும் நொதியங்களை பிரித்தெடுக்கின்றான். வருங்கால சந்ததிக்கான உணவு பூச்சிகளிலிருந்து அதிகரித்த புரதமாக (60 சதவீதம்) இதனைவிட குறிப்பாக தேனீக் களை மகரந்த சேர்க்கைக்குட்படுத்தும் வசதி வாய்ப்புக்களை மேலும் மெருகூட்டிக்கொண்டிருக்கின்றான்.

தேனீக்களைப் போல பல உயிரினங்கள் குறிப்பாக வண்ணத்துப் பூச்சிகள், காப்பெனர்ரா ஈக்கள், வௌவால்கள் மற்றும் ஏனைய பறவைகள் மகரந்தசேர்க்கையில் ஈடுபட்டாலும் தேனீக்கள் முதன்மையான மகரந்த சேர்க்கையாளன் எனும் பெருமையை பெற்றிருக்கின்றன. தேனீக்களின் ஒழுங்கமைப்பும் அவற்றிலுள்ள பிரிவுகளும், உடலமைப்பும், சுறுசுறுப்பும் இன்னும் தமக்கான உணவைத் தாமே தயாரிக்கின்ற சுரக்கின்ற தன்மையும், சமூக கட்டமைப்பு போன்ற அதியுயர் உணர்வுத் தன்மையும் கூடு கட்டிவாழ்கின்ற ராஜவாழ்க்கையும் பொறியியலாளருக்கிணைவான மெழுகினைச் சுரந்து அதனை வாய்ச் சுரப்பினில் கரைத்து அறுகோணி கூட்டைக்கட்டுகின்ற பாங்கும், உணவைத் தேடிச் செல்கின்ற கணக்கியல்பும் தேன்சுரப்புக்களையும் மகரந்த மணிகளையும் பூக்கிளிலிருந்து பெற்று பின்னாங்கால்களில் சேர்த்து வைத்து தனது நிறைக்கு ஒப்பான மகரந்தமணிகளை சேகரித்து தமது மனையேறும் தன்மை வியப்புக்குரியது. கூட்டுச் செயற்பாடு என்பதற்கும் தலைமைத்துவம் என்பதற்கும் சுறுசுறுப்பாக வேலைசெய்யும் உடலுழைப்பும் நாம் கண்டு வியப்பனவாகும்.

தேனீக்கள் சிறப்புக்குரிய பூச்சியினம் என்பனவற்றுக்கு சான்றாக பலவற்றை கூறலாம். ஒரு குடியில் இராணித் தேனீ, 100 ஆண் தேனீக்கள் மற்றும் ஒரு இலட்சம் வேலையாள் தேனீக்கள் இருக்கும்.

ஆண் தேனீக்கள் இனப்பெருக்கத்திற்காக உருவாக்கப்படுகின்றனவே தவிர அவற்றுக்கு வேறு தொழில்கள் இல்லை. தேன்குடியில் இருக்கின்ற போது வேலையாள் தேனீ சேகரித்து வந்த தேனையும் பூக்களிலிருந்து பெறப்பட்ட மகரந்த மணிகளையும் சுவைக்கும் சோம்பேறிகளாக ஒரு மடிய (Haploid) நிலையைக் கொண்டவையாகும். இராணித் தேனீ மற்றும் வேலையாள் தேனீக்கள் இருமடிய நிலையைக் கொண்ட (Diploids) பெண்வர்க்கத்தினர் சுறுசுறுப்பும் அதிக வேலைப்பளுவையும் கொண்டிருப்பவையாகும். தேன் குடியின் ஒட்டுமொத்த கட்டுப்பாடும் இராணித்தேனீயிடம் இருப்பது போல தோற்றமளித்தாலும் இராணி பலவீனமடைந்தால் அதற்காக புதிய இராணித்தேனீயை உருவாக்கும் தன்மை வேலையாள் தேனீக்களிடம் உண்டு. இதனை எமது தேர்தலில் அரசாள்பவர்களை மக்கள் தெரிந்தெடுப்பது போல அதிகளவிலான வேலையாள் தேனீக்களிடமே தேன்குடியை நிர்வகிக்கும் பொறுப்புண்டு.

தேனீக்கள் தமது வயிற்றறையின் பின்மூன்று துண்டங்களிலுமுள்ள மெழுகு சுரப்பியினூடாக தேன் குடியை வடிவமைக்கும் மெழுகினை சுரக்கின்றன. இந்த மெழுகு உமிழ்நீர்ச்சுரப்பியுடன் கலந்து பாகு நிலைக்கு வரும். கிட்டத்தட்ட சீமெந்தின் தன்மையைக் கொண்டதாக மெழுகினை பதப்படுத்தியெடுத்து குடியைப் புனரமைக்கவோ அல்லது புதிய குடியை உருவாக்கவோ பயன்படுத்திக் கொள்ளும். மெழுகின் தன்மையைப் பொறுத்து தேன்குடியின் வடிவமைப்பு இருக்கும். என்றாலும் தாமே உற்பத்தி செய்து அதனைக் கொண்டு தமது குடியை தயாரிக்கும் வல்லமை தேனீக்களிலேயே உள்ள சிறப்பியல்பாகும்.

இந்த மெழுகு நுண்ணங்கிகள் எதனையும் தொற்றுதலேற்படுத்த விடாது. தேன்குடியினுள் வரும் எந்த அங்கியையும் தேனீக்கள் தங்களது கொடுக்கால் கொலைசெய்து அதனை மெழுகுகொண்டு சீல் செய்துவிடும். அத்தகைய சிறப்பு வாய்ந்தது.

தேனீக்களில் தமது குடியிலுள்ள வேலைகளை செய்வதற்கென வேலையாள் தேனீக்களின் வயதுடன் வேலைகளும் கொடுக்கப்படும். இதனை உள்ளகப் பொறிமுறையாக (Innate mechanism) அவதானிக்கலாம். வேலையாள் தேனீயின் வயதுக்கேற்ப பல்வேறு தொழில்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும்.

தாமாகவே இந்த வேலைகளை செய்வதற்கான பொறிமுறை (கணனியிலுள்ள சிப்ஸ் போன்று) தேனீக்களின் மூளையில் உருவாக்கப்பட்டுவிடும். ஒற்றுமையான தமது கடமையாக அனைவரும் இந்த வேலைகளைப் பகிர்ந்தளித்து செய்யும் பொறிமுறையை நாம் எமது நிர்வாக கட்டமைப்பில் பிரித்து அல்லது பகிர்ந்து கொடுத்தல் (de-centralization) என அழைக்கின்றோம்.

உணவு தேடி கொண்டுவரும் தேனீ (Foraing bee) , குடியைப் பாதுகாக்கும் தேனீ (Guard Bee), இராணிக்கு உணவுதயாரிக்கும் தேனீ (Feeder bee), தாதிய தேனீ (Nurse bee), குடியைக் கட்டும் தேனீ, குடியை குளிர்மைப்படுத்தும் தேனீ, தேனீக்களை பாதுகாக்கும் தேனீ என பலவகைகள் உண்டு. தமது குடிலுக்கான சேவைகளை எவ்வாறு பிரித்து செய்து முடிக்கின்றன என்பது தேனீகளின் இரகசியம்தான்.

தேனீக்களின் நன்மைகள் பலவிருந்தும் அவற்றுக்கு பூக்கும் தாவரங்களை நாம் நடுகை செய்வது அவர்களை கவரச்செய்யும். குரோட்டன்கள் மற்றும் பூக்காத அழகுத்தாவரங்கள் தேனீக்களை கவராது. அதனால் அழகுக்காக வீடுகளில் நடுகை செய்யும் தாவரங்கள் தேனீக்களுக்கு மகரந்தத்தையும் தேன்சுரப்பையும் கொடுக்கக் கூடியனவாக பார்த்து நடுவது சிறந்தது.

வயல்நிலங்களில் விசிறப்படும் பீடைநாசினிகள் தேன்சுரப்பையும் மகரந்த மணிகளையும் பெறுவதற்காக பூக்களைத் தேடிவரும் தேனீக்களின் மேல் விசிறப்படும் பீடைநாசினிகளினால் இறக்க நேரிடுவதால் அவற்றின் எண்ணிக்கையில் வீழ்ச்சி கண்டிருக்கின்றது. அதனால் வீட்டுத் தோட்டங்களே இவ்வாறான தேனீக்களைப் பாதுகாக்கும் இடங்களாக காணப்படுகின்றன.

எமது உணவுப் பாதுகாப்பிற்கு அடித்தளமிடும் தேனீக்களை நாமும் அவசியம் பாதுகாக்க வேண்டும். இதனையே இயற்கை எம்மிடம் எதிர்பார்த்திருக்கின்றது. நாம் என்றும் இயற்கையை ஏமாற்றக் கூடாது. தவறின் விளைவு விபரீதமாகி விடும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 778





இதற்குள் உயிருள்ள மனிதனுடைய கரங்கள் போன்ற இரண்டு கரங்கள் மேலேயிருந்து துவாரத்துக்குள் வந்து அவனை இன்னும் கீழே தள்ளி அமுக்கியது. இடும்பன்காரியினால் அதை நம்பவே முடியவில்லை. ஒரு கணம் அவனைப் பெரும் பீதி பிடித்துக் கொண்டது. மறுபடியும் மேலும் கீழும் பார்த்தான். வாலில்லாக் குரங்கு தலை கீழாகத் துவார வழியில் இறங்கியிருப்பதையும், அதன் பாதி உடம்பு வரையில் கீழே வந்த பிறகு துவாரக்கதவு நெருங்கி வந்திருப்பதையும் கவனித்தான். இரண்டு மனிதக்கரங்களாகத் தோன்றியவை தன்னுடைய மனப் பிராந்தியாகத்தான் இருக்கவேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டான்.

இதற்குள் பிலத்துவாரத்தில் வந்தவர்கள் நெருங்கி வந்து விட்டார்கள். முன்னால் வந்த ரவிதாஸன், "அப்பனே! என்ன இது, எதற்காக இப்படி உளறி அடித்துக் கொண்டு அலறினாய்? அபாயம் ஏதேனும் உண்டா? நாங்கள் திரும்பிப் போகவா?" என்று கேட்டான்.

"வேண்டாம், வேண்டாம்! அபாயம் ஒன்றுமில்லை. பிலத்துவாரக் கதவை திறக்கும்போது, இந்த ராட்சதக் குரங்கு எப்படியோ இடம் பெயர்ந்து என் தலையில் விழுந்து விட்டது! ஒரு கணம் நானும் பீதி அடைந்து விட்டேன். இப்போது இந்தக் குரங்கு மேலேயும் போகாமல் கீழேயும் வராமல் வழியை அடைத்துக் கொண்டிருக்கிறது. கொஞ்சம் பொறுங்கள் இந்தக் குரங்கை அகற்றி வழியைச் சரிப்படுத்திவிடுகிறேன்" என்றான் இடும்பன்காரி.

தடுமாறி விழுந்த இடும்பன்காரியை மேலேயிருந்து அமுக்கித் தள்ளிய கரங்கள் யாருடைய கரங்கள் என்பதை வாசகர்கள் ஊகித்திருப்பார்கள். வந்தியத்தேவனுடைய அதிஷ்டம் இச் சந்தர்ப்பத்திலும் அவன் பக்கம் இருந்தது. சரியான சமயத்தில் அவனுக்குச் சரியான யுக்தி தோன்றியது. இடும்பன்காரி பிலத்துவராத்தின் படிகளில் நின்றபடி வெளவாலைப் பார்த்த தருணத்தில் அவன் தலை மீது வாலில்லாக் குரங்கைத் தள்ளினான். பிறகு அவன் தன்னுடைய முகத்தைப் பார்க்க முடியாத படி நின்று கொண்டு கைகளினால் அவனைப் பிடித்துக் கீழே அமுக்கினான். அதன் பின்னர் வாலில்லாக் குரங்கையும் தலைகீழாகத் துவாரத்தினுள் தள்ளினான். கடைசியாக, முதலையையும் நகர்த்தி விட்டான்.

இவ்வளவையும் சில கண நேரத்தில் செய்து முடித்து விட்டு வந்தியத்தேவன் யானை முகத்தண்டை ஓடினான். யானைத் தந்தங்களைப் பிடித்துத் தன் பலம் கொண்ட மட்டும் அழுத்தித் திருப்பினான். சுவரில் வழி உண்டாயிற்று ஆனால் மணிமேகலை உள்ளிருந்து வந்தது போன்ற விசாலமான வழி அல்ல. வட்ட வடிவமான குறுகலான வழி அது கதவுக்குள் கதவாயிருக்கலாம். முழுக் கதவையும் திறப்பது எப்படி என்று யோசிக்க அது சமயம் அல்ல. அதற்குள் சதிகாரக் கூட்டம் வேட்டை மண்டபத்துக்குள் புகுந்து விடலாம் பிறகு தான் தப்புவது துர்லாபமாகிவிடும்.

ஆகவே, திறந்த வழி குறுகலான வழியாக இருந்தாலும் அதற்குள் புகுந்து விட வேண்டியதுதான். தீர்மானித்தபடியே காரியத்தில் நிறைவேற்றத் துணிந்து, அந்த வட்ட வடிவமான துவாரத்தில் வந்தியத்தேவன் புகுந்தான். அவனுடைய தலையும் கைகளும் பாதி உடம்பும் உள்ளே வந்து விட்டன.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## பரிசும் ஊக்கமும்



(நேற்றைய தொடர்ச்சி)

மாமாவுக்கு ஆச்சரியம். எப்படி கூப்பிட்டாலும் எழுந்திருக்க மாட்டான் மணி. அப்படியிருக்க விளையாட்டு சாமான் என்றதும் துள்ளிகுதித்து எழுந்து விட்டானே. உடனே மாமாவுக்கு ஒரு யோசனை வந்தது. சரி நான் உனக்கு 20விநாடி தருகிறேன் அதற்குள் உன் கடமைகளை முடித்து தயாராக இரு போகலாம் என்றார்.

என்ன ஒரு ஆச்சரியம் 20 விநாடிக்குள் அனைத்தையும் முடித்து விட்டு நான் உள்ளேன் என்றான். மாமாவுக்கு மகிழ்ச்சி, இருவரும் கடைக்குச் சென்றனர். மணிக்கு பிடித்த பொருளை மாமா வாங்கிக் கொடுத்தார். மணியும் மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தான்.

அன்று இரவு மணியிடம் மாமா உரையாடிக் கொண்டிருந்தார்.

மணி உனக்கு பிடித்த விடயம் என்ன என்று கேட்டார். எனக்கு விளையாட்டுச் சாமான்கள் என்றால் மிகவும் பிடிக்கும், இனிப்பு பிடிக்கும் என்றான். அதை கேட்ட மாமா சிரித்து கொண்டே அருமை என்றார். அப்போ படிக்க பிடிக்காதா? விளையாடப் பிடிக்காதா? என்றார். மணி சிரித்துக் கொண்டே அவ்வளவு பிடிக்காது மாமா என்றான்.

மாமா மணியின் முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டே தொலைக்காட்சி பார்ப்பது தூங்குவது என்பது ஒரு மனிதனை நல்வழிப்படுத்தாது. நல்ல மனிதனாக வாழ நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் நல்ல படிப்பு தேவை. எப்பொழுதும் நம் கடமைகளை நாம் சிறக்க செய்ய வேண்டும் மணி என்றார் மாமா. உன் வயதில் நீ நன்றாக படிக்க வேண்டும், விளையாட வேண்டும் மற்றும் நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.மணி சிறிது நேரத்திற்கு பிறகு சரி மாமா என்றான். மாமா மகிழ்ச்சியுடன் நீ உன் அப்பா பெருமைப் படும்படி, ஆசிரியர் பாராட்டும் படி நடக்க வேண்டும். உன்னால் எல்லாம் முடியும் நீ அற்புதமான குழந்தை என்றார்.

இவ்வாறு பேசிக் கொண்டே வீடு திரும்பினார்கள். மறுநாள் காலை ஊருக்கு புறப்பட்டார். மணி, "மாமா ஒரு மாதம் கழித்து உனக்கு ஒரு பரிசு வாங்கி அனுப்புகிறேன், அதற்குள் உன் மாற்றத்தை பார்க்க வேண்டும்" என்றார். மணி மாமாவை கட்டித் தழுவி சரி மாமா என்றான்.

மாமா மணி தனக்குள் பேசிக்கொண்டான். மாமா சொல்லுவதைப் போல் நடந்தால் மாமா பரிசு வாங்கித் தருவார். நாளையிலிருந்து நான் என் கடமையைச் செய்ய வேண்டும் என்று பேசிக் கொண்டான். முதல் நாள் இரண்டாம் நாள் மணிக்கு தன் கடமைகளை செய்யக் கடினமாக இருந்தது.

அவன் முயற்சியை பார்த்த அப்பாவிற்கு மிகவும் மகிழ்ச்சி. மணி அப்பாவின் திட்டு இல்லாமல் பள்ளிக்குச் சென்றான். பள்ளி படிப்பிலும் ஆர்வத்தை காட்டினான். அதனால் நல் மதிப்பெண் பெற்றான். ஆசிரியரும் பாராட்டினார். மணிக்கு நம்பிக்கை பிறந்தது. இவ்வாறு நாட்கள் கடந்தன. ஒரு நாள் பள்ளியிலிருந்து வீடு திரும்பிய மணிக்கு பரிசு காத்திருந்தது. ஆர்வமுடன் பரிசுப் பொருளை திறந்து பார்த்தான். அவனுக்கு பிடித்த விளையாட்டு சாமானும் ஒரு நல்லொழுக்க சிறுகதை புத்தகமும் இருந்தது. மணிக்கு மிக்க மகிழ்ச்சி. இப்பரிசு மணியை மீண்டும் ஊக்கப்படுத்துவதைப் போல் இருந்தது. மணி தன் கடமையிலிருந்து தவறாமல் வெற்றி நடை போட்டான்.

(முற்றும்.)

ஜீவகாருண்யம் உண்டானால் அருள் உண்டாகும் அருள் உண்டானால் அன்பு உண்டாகும், அன்பு உண்டானால் சிவானுபம் உண்டாகும். ~ அருட்பெருஞ்சோதி வள்ளலார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆலயங்களை அழிக்காமல் ஆலயச் சூழலை அழித்தல்

இலங்கையில் சைவ சமயத்தின் இருப்பு என்பது வேகமாக இழந்து போவது தெரிகிறது.

மதமாற்றங்கள் உச்சம் பெற்றுவிட்ட நிலையில், சைவ சமயத்தில் இருந்து மதம் மாறியவர்கள் எப்படியும் சைவ சமயத்தை அழித்து விட வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கின்றனர். அந்தளவில் அவர்களுக்கு கூலி வழங்கப்படுகிறது.

இஃது ஒரு புறமிருக்க, இப்போது சைவ ஆலயங்களை அழிப்பதற்கான வியூகம் அமைக்கப்பட்டுவிட்டது.

சைவாலயங்களை நேரடியாக அழிப்பதென்பது கடும் எதிர்ப்புக்குரியதாக இருக்குமென்பதால், மறைமுகமான திட்டம் இப்போது அரங்கேறி வருகிறது.

இங்குதான் சைவாலயங்களை அழிப்பதற்குப் பதிலாக ஆலயச் சூழலை அழித்து விட்டால், சைவாலயங்கள் தாமாக அழிவுறும். இந்த அடிப்படையிலேயே புனிதமான நல்லூர்க் கந்தனின் ஆலயச் சூழலில் மாமிச உணவகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதை நாம் கூறும்போது, நல்லூர்ச் சூழலில் தான் மாமிச உணவகம் முதலில் ஆரம்பிக்கப்பட்டதா என்று கேட்டால் இல்லை. யாழ். பலாலி வீதியில் ~ கோண்டாவில் சந்தியில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு மிக அருகில் மாமிச உணவகம் திறந்து வைக்கப்பட்டதன் மூலம் சைவாலயச் சூழலை அழிக்கின்ற முயற்சி ஆரம்பிக்கப்பட்டது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இந்த வரிசையில் இப்போது நல்லூர் ஆலயச் சூழலில் மாமிச உணவகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆம், நல்லூர்க் கந்தப் பெருமானின் முகப்பு வீதியில் யாழ்ப்பாணம் மாநகர சபை அமைந்துள்ள நல்லூர்க் கந்தசுவாமியாருக்குச் சொந்தமான காணிக்கு முன்பாக குறித்த மாமிச உணவகம் அமையப் பெற்றுள்ளது.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் ஆலயச் சூழல் முழுவதும் தெய்வீகமாகிவிடும். அங்கப்பிரதட்சணம், காவடிகள், பாதயாத்திரைகள், பஜனைகள் என எங்கும் கந்தா ~ முருகா ~ நல்லூர் வேலா என்ற நாமங்களே ஒலிக்கும்.

இங்குதான் இப்பெரும் பக்தி நிலை இருந்தால் சைவத்தை அசைப்பது முடியாத காரியம்.

ஆகையால் நல்லூர் முருகன் ஆலயச் சூழலில் மாமிச உணவகத்தை ஆரம்பித்து கோழிப் பொரியல், மாட்டுக் குழம்பு, ஆட்டு வறுவல் என உணவுகளைத் தயாரித்து ஆலயச் சூழல் முழுமைக்கும் அந்த வாசத்தைப் பரப்ப, விரதங்களும் அங்கப் பிரதட்சணங்களும் காவடி ஆட்டங்களும் வெம்பி விழ, மறுபுறத்தில் கோழிக் கால்களைக் குதறிச் சுவை பார்க்கும் போசனங்கள் நடக்கும்.

பிறகென்ன, நல்லூர் ஆலயச் சூழல் அசைவமாகி தன்னிலை கெட, பக்தி நிலை அற்று சைவம் மங்கும். இதற்கான ஏற்பாடுகளே இவை.

ஆம், சைவ ஆலயச் சூழலை நோக்கிய மாமிச உணவகங்களின் உற்பவங்களைத் தடுக்காவிட்டால், சைவம் இனி மெல்லச் சாகும்.

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு தருவதாகக் கூறி

# ஆட்சிப் பீடமேறிய அநுர அரசும் தமிழர் தாயகத்தைப் பறிக்கவே எத்தனிக்கிறது

### கஜேந்திரகுமார் எம்.பி விசனம்

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு தருவதாக வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அநுர அரசும் முன்னைய அரசாங்கங்களைப்போல தமிழர்களைத் தங்கள் சொந்தத் தாயகத்தில் சிறுபான்மையினராக மாற்ற கடும் பிரயத்தனம் மேற்கொள்வதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விமர்சித்துள்ளார்.

வடக்கிலுள்ள காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் உடனடியாக மீளப் பெறப்படவேண்டும் என வலியுறுத்திய அவர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்குப் பிரேரணையொன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தமிழர் நிலங்களை அரசு கையகப்படுத்துதல் எனத் தலைப்பிடப்பட்டுள்ள அப்பிரேரணையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 28.03.2025 திகதி இடப்பட்ட, 2430/2025 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள 5ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட காணிகள் தொடர்பில் 7 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அறிவிப்புகளின் மூலம் கடற்கரைகள், ஏரிகள், வண்டிப் பாதைகள் மற்றும் மயானங்கள் என்பன உள்ளடங்கலாகத் தமிழ் மக்களால் பூர்வீகமாகப் பயன்படுத்தப்பட்ட பொதுச் சொத்துக்களைக் கொண்ட நிலங்களை அரசு கையகப்படுத்த முயற்சிக்கின்றது.

இலங்கை அரசு தமிழர்களை தங்கள் சொந்தத் தாயகத்தில் சிறுபான்மையினராக மாற்றுவதற்கு தொடர்ந்தும் முயற்சிக்கிறது.

வடக்கு, கிழக்கிலுள்ள நிலத்தின் மீது தங்கள் தன்னாட்சி கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் இவ்வர்த்தமானி அறிவித்தல் இலங்கை அரசாங்கங்களினால் தமிழர்களின் தாயகம் பறிக்கப்படும் நீண்ட வரலாற்றின் மற்றொரு முயற்சியாக அமைந்திருக்கின்றது.

அத்தோடு வர்த்தமானி அறிவித்தலில் உள்வாங்கப்பட்டுள்ள நிலங்கள் தமிழ் மக்களால் பூர்வீகமாகப் பயன்படுத்தப்பட்ட நிலங்களையும் பொதுச் சொத்துக்களையும் உள்ளடக்கியது என்பது எமது புரிதலாகும்.

சுனாமி அனர்த்தத்தின்போதும் தொடர் இடப்பெயர்வுகளாலும் ஆவணங்கள் இழக்கப்பட்டுள்ள நிலையில் காணி உரிமையாளர்கள் தமது உரித்தை உறுதிப்படுத்துவதில் சிரமங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள்.

அரசின் இந்த வர்த்தமானி அறிவித்தல் அரசு நிலத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முன்னைய அரசாங்கங்களின் கருத்துக்களிலிருந்து வேறுபட்டதல்ல என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை தமிழர் தேசத்தின் மற்றொரு கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலைச் செயலாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

ஆகவே இவ்வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் உடனடியாக மீளப்பெறவேண்டும் என அப்பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-4,7)

## பாடசாலை பேருந்தின் சாரதி மது போதையில் சாரத்தியம்

### மயிரிழையில் தப்பிய மாணவர்கள்

கட்டுப்பொத்த பகுதியில் பாடசாலை மாணவர்களுடன் பயணித்த பேருந்தின் சாரதி மது போதையில் சாரத்தியம் செய்தமை கண்டறியப்பட்ட நிலையில் போக்குவரத்துப் பொலிஸாரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டார்.

இதனால் பெரும் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழாத வண்ணம் தடுக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கட்டுப்பொத்த பகுதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பாடசாலை பேருந்து ஒன்றைப் பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் சோதனையிட்ட போது சாரதி மது அருந்தியிருந்தமை தெரியவந்ததையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது பேருந்தில் 16 பாடசாலை மாணவர்களும் 02 பெற்றோர்களும் பயணித்ததாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சாரதி கட்டுப்பொத்த பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் எனவும் அவர் மேலதிக விசாரணைகளின் பின் நாரம்மல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,7)

### யாழ்.பிரதேச செயலகத்தில் இன்று

## மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வசந்தவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் படைப்பாற்றலைக் கௌரவிக்கும் மாற்றுவலுவுள்ளோர் சங்கக் கலாசார விழாவான “வசந்த விழா” நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக வளாகத்திலுள்ள திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன், AVR அறக்கட்டளைத் தலைவர் மற்றும் நிறுவுநர் சிவகுமார் தம்பதிகள், வலிகாமம் கல்வி வலய ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-4,7)

## இலங்கைக்கு வருகை தரவுள்ள நியூசிலாந்தின் துணைப் பிரதமர்

(கொழும்பு)

நியூசிலாந்தின் துணைப்பிரதமரும்வெளியுறவு அமைச்சருமான வின்ஸ்டன் பீட்டர்ஸ் நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

இதன்படி எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 28 ஆம் திகதி வரை அவரது இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் அமையவுள்ளது.

அவரது இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வர்த்தகம், முதலீடு, விவசாயம், கல்வி, சுற்றுலா மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் அவர் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது துணைப் பிரதமர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் உடன் நியூசிலாந்தின் வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் மூவரும் வருகை தருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

50/100



**மகர இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 11.05.2025 அன்று 6 ஆம் இடத்திற்குப் பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்திற்கு குருபகவான் செல்வதால் நல்ல பலன்கள் நடைபெறும். என்றாலும் மறை முக எதிர்ப்புகள் அதிகரிக்கும் மனதில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது.

# ஆறில் வந்தது குரு! அதிக முயற்சி தேவை!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். "ஆறில் குரு ஊரில் பகை" என்பது பழமொழி அந்த அடிப்படையில் ஒரு பிரச்சினை ஓய்ந்தால் அடுத்த பிரச்சினை வரத்தான் செய்யும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

வாக்கிய கணித ரீதியாக சனிப் பெயர்ச்சி வரை கொஞ்சம் பொறுமையாக செயற்படுவது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகும். உங்கள் முன்னேற்றத்தைப் பற்றி சக பணியாளர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே குடும்ப ஸ்தானம் பலமடைகின்றது. இல்லத்தில் இதுவரை இருந்த சண்டை, சச்சரவுகள் இப்பொழுது ஓயும். குறிப்பாக குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவது யோகம்தான். நினைத்தது நிறைவேறும், நேசம் மிக்கவர்களின் ஒத்துழைப்பும், தொழில் முன்னேற்றமும் காண்பீர்கள். பொருளாதார பற்றாக்குறை அகலும் புனிதப் பயணங்கள் அதிகரிக்கும்.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் தொழில் முன்னேற்றம் ஏற்படும். இதுவரை ஸ்தம்பித்து நின்று தொழில் வெற்றி நடைபோடும். புதிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு இலாபம் குவிக்க முன்வருவீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் செய்பவர்களுக்கு எதிர்பார்த்தபடி இலாபம் கிடைக்கும். கூட்டுத் தொழிலில் இருந்து விலகித் தனித்து இயங்கலாமா என்று சிந்திப்பீர்கள். பார்க்கும் குருவைப் பலப்படுத்தத் துணைவியோடு இருக்கும் குருபகவான் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

குருவின் பார்வை 12ஆம் இடத்தில் பதிவதால் நீண்டதூரப் பயணங்கள் செல்லும் வாய்ப்பு உண்டு. புதிய வாகனங்களை வாங்கி மகிழும் நேரமிது. அதிகமான அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் கிடைக்கும். அதேநேரம் ஆரோக்கியத்தில் சிறு தொல்லைகள் வந்தாலும் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.06.2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது தாய் வழி ஆதரவு கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர். கொடுக்கல்- வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். தைரியமும், தன் நம்பிக்கையும் அதிகரிக்கும்.

10.6.2025 முதல் 7.8.2025 வரை திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். பழைய பிரச்சினைகள் படிப்படியாக முடிவிற்கு வரும். நல்ல காரியங்கள்




பலவும் நடைபெற வழிபிறக்கும் பற்றாக்குறையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

8.8.2025 முதல் 25.5. 2026 வரை புனர்பூசம் நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்க, முதலில் எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்பட்டாலும் முடிவில் அனுகூலம் உண்டு. தொழிலில் புதிய முதலீடுகள் செய்து அகலக்கால் வைப்பதை விட நடக்கும் தொழிலை நல்ல விதமாக பார்த்துக்கொள்வது நல்லது.

**குருவின் அதிசாரப்பெயர்ச்சி**

8.10.2025 அன்று குரு பகவான் கடக இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 1,3, 11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். உச்சம் பெற்ற குருவாகப் பார்ப்ப தால் மிகுந்த நற்பலன்கள் கிடைக் கும் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். எதிர் காலத்தைப் பற்றிய பயம் அகலும் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கொஞ்சம் தாமதமாகலாம்.

இதுவரை எந்த முயற்சிக்கும் ஒத்துவராத சகோதரர்கள் இப்பொழுது ஒத்து வருவர். கூட்டுத் தொழில், தனித் தொழிலாக மாற வாய்ப்பு உண்டு. எதிர்பாராமல் வரும் தகவலால் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படும் பிறர் பாராட்டும் விதத்தில் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும் நேரமிது. பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

இந்தக் குருவின் அதிசாரப் பெயர்ச்சிக் காலம் அனுகூலமான காலம் தான் என்றாலும் இக் காலத்தில் திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபட்டால் முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும்

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனிபகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது உங்கள் இராசிக்கு ஏழரைச் சனி முழுமையாக விலகிவிட்டது. இனி கவலை இல்லை. விரயங்கள் குறையும். சேமிப்பு உயரும். நழுவிச் சென்ற வாய்ப்புகள் எல்லாம் ஒவ்வொன்றாக நாடிவரும் கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தொழில் போட்டிகள் அகலும். தொலை தூரத்திலிருந்து நல்ல தகவல் வரும். வீடு கட்டுவது அல்லது வீடு வாங்குவது பற்றிய சிந்தனை அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக ஆரம்பத்தில் கொஞ்சம் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். கடக இராசிக்கு வந்த பின்னால் அதன் பார்வை பலனால் மிகுந்த நன்மைகளைக் காணப் போகிறீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். கடன்சுமை குறையும். பிள்ளைகள் பெருமைக்குரியவிதம் நடந்து கொள்வர். பணிபுரியும் பெண்களுக்கு பாராட்டுகளும், புகழும் கூடும். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்தைத் தரும்.

(தொடரும்)

## யானை தாக்கி...

கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பா.சுப்பிரமணியம் (வயது-63) என்பவரே மரணமடைந்தவராவார்.

அவரின் வீட்டிலிருந்து அருகில் உள்ள கடைக்குச் சென்ற பொழுது வீதிக்கரையில் நின்ற காட்டு யானை அவரைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பறையனாலங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4)

## கைதடியில்...

கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த மேற்படி நபர் ஐந்து நாள் விடுமுறையில் தனது சொந்த இடமான வண்ணார்பண்ணைக்குச் செல்ல ஆயத்தமாகியபோதே யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,30)

## வடக்கு மாகாண...

அதற்கமைய அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அவருக்கு வழங்கப்பட்டது. (ம-7,4,33,104)

## சர்வதேச...

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை குறித்த கண்காட்சி இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணி முதல் இரவு 8 மணிவரை புத்தகக் கண்காட்சியை பார்வையிட முடியும்.

யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகக் கண்காட்சிக்கு வலம்புரிப் பத்திரிகை நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## இரத்த வாந்தி...

இதனைத் தொடர்ந்து அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிகாலை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,4,60)

## தமிழ் மக்கள்...

நினைக்கின்றேன் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் அவர்களுடைய காணிகளுக்கான ஆவணங்கள் எதுவும் இல்லாத சூழ்நிலையில் கடந்த மார்ச் 28ஆம் திகதி வர்த்தமானி மூலம் இந்த அறிவித்தல் கோரப்பட்டிருப்பது அந்த மக்களை பொறுத்தவரை மிகப்பெரிய ஒரு அச்சுறுத்தல்.

யுத்தம் நடந்த பிற்பாடு அவர்கள் இருக்கும் போதே தையிட்டியில் விகாரை கட்டி அந்தக் காணியைத் தருமாறு கோருகின்ற சூழலில், இன்று நாவற்குழியில் காணியைப் பிடித்து விகாரை கட்டியிருக்கின்ற சூழலில் இராணுவ முகாம்களுக்கு வழங்க முன்னெடுக்கின்றீர்கள் என்ற அச்சம் தோன்றியிருக்கின்றது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் குறிப்பாக வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களை கூடுதலாக மையப்படுத்திய வகையிலேயே அங்கிருக்கின்ற பெருமளவான ஏக்கர் காணிகளை என்ன தேவை என்பதற்கு ஒரு மறைமுகமான கருத்தியலுடன் அந்தக் காணிகளை அளவீடு செய்வதற்கும் அதன் உரிமையாளர்கள் நீங்கள் பதிவு செய்ய வேண்டும். இல்லையேல் நாங்கள் இரத்துச் செய்வோம் என்ற அடிப்படையில்தான் வந்திருக்கின்றது" எனத் தெரிவித்தார். (ம-7,4)

## இளம் குடும்பஸ்...

திகதி உடல்நிலை சரியில்லை என வீட்டில் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் உடல்நிலை முன்னேற்றம் இல்லாததால் திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் அன்றே உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் உடலில் கிருமித் தொற்று பரவி உடற்கூறுகள் செயலிழந்தமையால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,4,33,104)

## முறை...

எண்ணும் நிலையில் மாட்டிறைச்சி உணவகத்தைச் செயற்பட இடமளிக்கக் கூடாது. இதற்கு அனுமதி வழங்கியது யார்? ஆணையாளரே பதில் சொல்ல என்ற கோசங்களுடன் சைவ மக்கள் நேற்று அறவழிப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மக்கள் யாழ். மாநகர சபையின் ஆணையாளரை நீதிகோரி அணுகிய நிலையில் அறப் போராட்டத்தில் ஈடுபட்டோருடனான கலந்துரையாடலின்போதே ஆணையாளர் மேற்குறித்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்டுள்ள ஆணையாளர், பல் நாட்டுக் கம்பனியின் கிளையாக நிறுவப்பட்டுள்ள குறித்த மாட்டிறைச்சி உணவகமானது யாழ். மாநகர சபையிடம் எதுவித முறையான அனுமதியையும் பெறவில்லை.

முறையான அனுமதியைப் பெறுமாறும் அதுவரை உணவகத்தை மூடுமாறும் யாழ். மாநகர சபையால் வழங்கப்பட்ட கடிதங்களை அவர்கள் அலட்சியம் செய்துள்ளதுடன் தொடர்ந்தும் உணவகத்தை நடத்துகின்றனர்.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபையால் நாளை (இன்று) குறித்த உணவகத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ள நிலையில் கடந்த திங்கட்கிழமை அவர்கள் மாநகர சபையின் அனுமதி கோரிய கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (ம-7,4,33)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,

076 097 3127


### மஹஜன சம்பத

திகதி 2025.05.20 | சீட்டிழுப்பு இலக்கம் 5835

R 6 8 0 5 1 6

அத சம்பத: R 0 5 1 6 | சீட்டிழுப்பு இலக்கம் 410

### தன நிதானய

திகதி - 2025.05.20 | சீட்டிழுப்பு இலக்கம் - 1865

B 10 23 39 44 B

Double Chance 26055

### மெகா பவர்

திகதி 20/05/2025 | சீட்டிழுப்பு இலக்கம் 2183

S 09 07 08 37 54

### ஜய JAYA

திகதி 2025.05.20 | சீட்டிழுப்பு இலக்கம் 103

G 5 7 0 9

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4077 | சீட்டிழுப்பு திகதி 20.05.2025

C 01 13 54 62 | C

### HANDAHANA

சீட்டிழுப்பு திகதி 2025.05.20 | சீட்டிழுப்பு இலக்கம் 1144

மீனம் 01 06 43 53 மீனம்

12914 | 39

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பல் சம்பத

20.05.2025 | வெற்றி வாரம் 543

P 0 2 5 6 2 7

97901

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,571,668.00

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2809 | சீட்டிழுப்பு திகதி 2025.05.20 | தினம் செவ்வாய்க்கிழமை

11 16 70 75 T

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,965,136.00

### சனிதா

திகதி 20.05.2025 | வெற்றி வாரம் 4970

01 32 43 62 K

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,273,231.20

ரூ.100,000/- 77670

### சசிரி

686 | 20.05.2025 | செவ்வாய்க்கிழமை

01 43 48

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4521 | சீட்டிழுப்பு திகதி 20.05.2025 | தினம் செவ்வாய்க்கிழமை

06 31 38 53

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,932,948.80

106564

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

A 37 10 24 25 53

1985 | 20.05.2025 | செவ்வாய்க்கிழமை

### அட கோடீபதி ADA KOTIPATHI

செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம்: 2635 | சீட்டிழுப்பு திகதி: 2025.05.20

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,825,583.20

26 47 50 71 J

783572

## நல்லூர்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அருகே திறக்கப்பட்ட அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி நேற்று மாலை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் என்பது வெறும் ஆலயம் அல்ல. அது எங்கள் ஒட்டு மொத்த யாழ்ப்பாணத்தின் அடையாளம். எங்கள் மரபு அதன் புனிதத்தைப் பாதுகாப்பது. இங்கு இருக்கும் ஒவ்வொருவ ரின் பொறுப்பு இங்கு பிற மத த்தை சேர்தவர்கள் கூட நல்லூர் என்றதும் முருகா என்று சொல் லிவிட்டு போவார்கள் என்று கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமான போராட்டம் யாழ். மாநகரசபை வரை சென்று குறி த்த அசைவ உணவகம் முன் நிறைவடைந்தது. (ம-4,7,33)

## ஆளும்...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (20) எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஷ பாதாளக் குழுக்களின் செயற்பாடு மற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவ ங்கள் தொடர்பில் நிலையியற் கட்டளை 27/2 கீழ் எழுப்பிய கேள்விகளுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளித்தார்.

இதனையடுத்து, ஐக்கிய மக் கள் சக்தி எம்.பி தயாசிறி ஜய சேகர ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, மேலும் சில கேள்விகளை எழுப்பியதுடன் சில குற்றச்சாட்டுக்களையும் முன் வைத்தார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த ஆளும் தரப்பு எம்.பி கௌஷ ல்யா ஆரியரத்ன, தயாசிறி எம்.பி. எழுப்பிய ஒழுங்குப் பிரச் சினை நிலையியற் கட்டளைக்கு முரணானது. சபையைத் தவ றாக வழிநடத்தி இருக்கிறார் எனத் தெரிவித்தார். இதன்போது தயாசிறி எம்.பி. அதற்குப் பதில ளிக்க முற்பட்டபோது சபாநாயகர் அதற்கு அனுமதியளிக்கவி ல்லை.

இதன்போது தயாசிறி எம்.பி. கௌஷல்யா எம்.பியைப் பார்த்து ஏதோ தெரிவித்தார். அதன்போது அவரின் ஒலிவாங்கி முடக்கப்பட்டி ருந்தது.

இதன்போது எழுந்த சபைமு தல்வர் அமைச்சர் பிமல் ரத்னா யக்க கடும் தொனியில் தர்க் கத்தில் ஈடுபட்டார். ஜனாதிபதி நிதியத்தில் கொள்ளையடித் தவர், ஏழைகளின் பணத்தை சூறையாடியவர் என்றவாறாக கடும் ஆவேசமாக தயாசிறி எம்.பியை பார்த்து தெரிவித்தார்.

சபை முதல்வர் பிமல் ரத் நாயக்க, அமைச்சர் வசந்த சமர சிங்க உள்ளிட்டோருடன் இன் னும் சில அரச தரப்பினரும் எதிர்க்கட்சியினருக்கு எதிராகக் கருத்துக்களை முன்வைத்தனர். அரச தரப்பினர் தமது கருத் துக்களை ஒழுங்குப் பிர ச்சினை என்ற அடிப்ப டையில் முன்வைக்க அனுமதித்த சபாநாயகர் எதிர்க்கட்சியினருக்கு நேரம் வழங்க மறுத்து விட்டார். இதனால் எதிர் க்கட்சியைச் சேர்ந்தவர் கள் கடும் வாக்குவாதத் தில் ஈடுபட்டனர்.(ம-4,7)

# முகைதீன் படுகொலை வழக்கிலிருந்து புளொட் நெடுமாறன் விடுதலை

## வவுனியா மேல்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி

(வவுனியா)

வவுனியாவில் மருத்துவர் முகைதீனை சுட்டுப்படு கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநா தன் பிரேமநாத் என்பவருக்கு வவுனியா மேல்நீதிமன்றம் மரணதண்டனை வழங்கிய நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தீர்ப்பை இரத்துச் செய்து அவரை விடு தலை செய்ய உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன் றின் நீதிபதிகளான சசி மகே ந்திரன், அமலரணராஜா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்தத் தீர்ப்பை நேற்று அறி வித்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆகியோரின் வாதங்களை ஏற்ற நீதிமன்றம் இந்தத் தீர் ப்பை அறிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 20ஆம் திகதி கற்குழியில் அமைந்துள்ள தனியார் வைத் தியசாலையில் கடமையில் இருந்த மருத்துவரான சுல் தான் முகைதீன் சுட்டுப்படு கொலை செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பில் குற்றவாளி யாக சந்தேகிக்கப்பட்ட அன் றைய புளொட் உறுப்பினரான நெடுமாறன் என்று அழைக் கப்படும் சிவநாதன் பிரேமநாத் என்பவர் மீது வவுனியா மேல்நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது. நீண்ட விசாரணைகளின் பின்னர் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி அப் போதைய வவுனியா மேல் நீதி மன்ற நீதிபதியான மா.இளஞ் செழியன் நெடுமாறன் என்ப வரை குற்றவாளியாகக் கண்டு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந்நிலையில் இத்தீர்ப் பிற்கு எதிராக கௌரி சங்கரி சட்ட நிறுவனம் சார்பில் மேன் முறையீடு செய்யப்பட்டது. மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் முடிவடைந்த நிலையில் இன்று (நேற்று) தீர்ப்புக்காக திகதியிடப்பட்டி ருந்தது.

அந்தவகையில் குற்ற வாளிக்கு எதிராக வவுனியா மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றிய மேன் முறையீட்டு நீதிமன்றம் குறித்த மனுதாரரை வழக்கில் இருந்து முழுமையாக விடு வித்து தீர்ப்பளித்தது.குறித்த மேன்முறையீட்டு வழக்கில் சட்டத்தரணி தர்மஜா தர்ம ராஜாவின் ஆலோசனையின் பிரகாரம் சட்டத்தரணி அன் டன் துரைசிங்கம் ஜெயாந் தன், ஓஷதி ஹப்பு ஆராச் சியுடன் ஜனாதிபதி சட்டத்த ரணிகளான கே.வி. தவராசா மற்றும் அனில் சில்வா ஆகி யோர் ஆஜராகினர். சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலி சிட்டர் ஜெனரல் அசாத் நவாவி ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7,250)

# யாழ். நகரில் நீண்ட நாட்களாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டவர் கைது

## 16 சைக்கிள்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் நீண்ட நாட்களாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட 40 வயது மிக்க குருநகர் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து பெண்கள் பயன்படுத்தும் 11 சைக்கிள்கள், ஆண்கள் பயன்படுத்தும் 5 சைக்கிள்கள் உள்ளடங்கலாக 16 சைக் கிள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக குறித்த நபர் யாழ். நகர் பகுதி, கே.கே.எஸ் வீதி - நல்லூர் பகு திகளில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுள்ளார்.

சைக்கிள் உரிமையாளர் கள் ஆதாரம் காட்டி சைக் கிளை பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார் அறிவித்துள்ள னர். (ம-4,7)


### வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

077 889 3914 (4342)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, ஊர்காவற்துறை, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3012)

076 825 7716 (ஆகாஸ்)

சுத்தமான, சுகாதாரமான முறையில் பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ கொள்வனவு செய்யப்படும்

கொள்வனவு விலை 1Kg - 400/-

தேவைப்படும் அளவு 100 Kg

மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ கொள்வனவு செய்யப்படும் (C-3013)

தொடர்புகளுக்கு : 077 590 2467

### கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

### மணமகன்கள் தேவை

1999 கனடா, 1995 லண்டன், 1987 அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வசிக்கும் பெண்களுக்கு உள்ளூர், வெளியூர் மணமகன்கள் தேவை. (1153)

077 041 3462
077 408 8241

### மணமகள் தேவை

1993 கனடாவில் வசிக்கும் Doctor க்கு உள்நாட்டு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 335 3461 (1153)

### யா/இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

#### வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும்

காலம்: 08.06.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 10.00 மணி
இடம்: சைவ மகாஜன மண்டபம் சரஸ்வதி கலையரங்கு

நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம்
2. தலைமையுரை
3. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை
4. பொருளாளர் கணக்கறிக்கை
5. புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு
6. கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்
7. நன்றியுரை

பழைய மாணவர்கள் அனைவரும் வருகைதந்து கூட்டத்தினை சிறப்பிக்குமாறு அன்பாக அழைக்கின்றோம். (C-3011)

செயலாளர்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.